Ours bank with Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House (A Heritage Hotel) 2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900 College House Annameenakshi Restaurant (Veg.) 2, Town Hall Road, Madurai-625 001.


மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 103 | உள்ளூர் - 13.04.2026 திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 103 | வெளியூர் - 14.04.2026 செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com


பராபவ தமிழ் புத்தாண்டு 2026: ராசிபலன்களும் / மாற்றங்களும்!

இந்திய வங்கியில் 350 காலியிடங்கள்..!

வெடித்த பட்டாசு ஆலை.. 60 பேரின் நிலை..?

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## தமிழக பாஜக நிர்வாகிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை!



புதுடெல்லி, ஏப். 13–

தமிழக சட்டசபை தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. தமிழகம் முழுவதும் அரசியல் கட்சி தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய பிரதமர் மோடி 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார். 15–ந்தேதி நாகர்கோவிலில் அவர் பிரசாரம் மேற்கொள்கிறார். இது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மீண்டும் 18–ந்தேதி கோவையில் பிரதமர் மோடி பிரசாரம் மேற்கொள்ள இருக்கிறார். இதற்காக கோவையில் பிரமாண்ட பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கொங்கு மண்டலத்தில் போட்டியிடும் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர்கள் பங்கேற்கிறார்கள்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களும் பங்கேற்று பேச உள்ளனர். இந்த நிகழ்வுக்கான கால்கோள் விழா கோவையில் நேற்று நடந்தது. இதற்கிடையே பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின்நபின் இன்று கந்தர்வகோட்டையில் நடக்கும் பிரசார கூட்டத்தில் பங்கேற்று பேச உள்ளார். தொடர்ந்து தஞ்சாவூரில் நடக்கும் பூத் கமிட்டி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவும் தமிழகத்தில் பிரசாரம் செய்ய இருக்கிறார். இதற்கான பயண திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. அதேபோல், மத்திய மந்திரிகள் பலரும் பிரசாரத்திற்கு வர உள்ளனர். இதற்கிடையே, தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளுடன் பிரதமர் மோடி இன்று மாலை 4 மணிக்கு காணொலி க்காட்சி மூலம் ஆலோசனை நடத்த இருக்கிறார். தமிழகம் முழுவதும் பா.ஜ.க.வுக்கு 5 லட்சம் பூத் கமிட்டி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்துகொள்பவர்கள் 'நமோ' செயலி மூலம் பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளது.

## நெல் சாகுபடி ஊக்கத்தொகை - நிர்மலா சீதாராமன் கடிதம் வெளியிட்டார்!





சென்னை, ஏப். 13–

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நெல் சாகுபடி ஊக்கத்தொகை தொடர்பாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறிய குற்றச்சாட்டை முற்றிலும் மறுத்துள்ளார். அவர் வெளியிட்ட கடிதத்தில், மத்திய அரசு அனுப்பிய கடிதம் ஆலோசனை மட்டுமே, கட்டாய உத்தரவு அல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

**முக்கிய விவரங்கள்**

**குற்றச்சாட்டு:**

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், "மத்திய அரசு தமிழகத்திற்கு நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளது" என குற்றஞ்சாட்டினார்.

நிர்மலா சீதாராமன் பதில்:

குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என அவர் கூறினார். மத்திய அரசு அனுப்பிய கடிதம் ஆலோசனை மட்டுமே; கட்டாய உத்தரவு அல்ல.

ஸ்டாலின் விவசாயிகளை திசைதிருப்பும் நோக்கில் அரசியல் உள்நோக்கத்துடன் தவறான தகவலை பரப்புகிறார் என குற்றஞ்சாட்டினார்.

அவர் வெளியிட்ட எக்ஸ் (X) பதிவில்: "நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு உத்தரவிட்டதாக கூறுவது முற்றிலும் தவறானது" என குறிப்பிட்டார்.

## பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறிய பட்டாசு ஆலை.. 60 பேரின் நிலை என்ன..?



விருதுநகர், ஏப். 13–

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. விருதுநகர் மாவட்டம், தமிழ்நாட்டின் பட்டாசு தயாரிப்பு மையமாக அறியப்படுகிறது. சிவகாசி மற்றும் சாத்தூர் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஆலைகள் உள்ளன. தொடர்ந்து பட்டாசு ஆலைகளில் வெடி விபத்துகள் நிகழும் சம்பவங்களும் அவ்வப்போது நிகழ்ந்து வருகிறது. இந்த நிலையில் சாத்தூர் அருகே உள்ள மடத்துப்பட்டியில் உள்ள பட்டாசு ஆலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மடத்துப்பட்டியில் பட்டாசு ஆலை வழக்கம் போல் இயங்கி வந்தது. திடீரென பயங்கர சத்ததுடன் 4 முறை வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. ஆலையில் அடுத்தடுத்து பட்டாசுகள் வெடித்துச் சிதறியதால் சுற்றுவட்டாரப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். வெடிவிபத்து ஏற்பட்ட பட்டாசு ஆலையில் 60க்கு மேற்பட்டோர் பணியில் இருந்ததாக கூறப்படுகிறது.

## தேர்தலையொட்டி தமிழகத்தில் 4 நாட்கள் மதுக்கடைகள் மூடல்!




சென்னை, ஏப். 13–

தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி மாநிலம் முழுவதும் உள்ள TASMAC மதுக்கடைகள் 4 நாட்கள் மூடப்படும். மூடப்படும் தேதிகள்: ஏப்ரல் 21, 22, 23 (வாக்குப்பதிவு நாள்) மற்றும் மே 4 (வாக்கு எண்ணிக்கை நாள்).

மூடப்படும் நாட்கள்

ஏப்ரல் 21, 2026 (செவ்வாய்)

ஏப்ரல் 22, 2026 (புதன்)

ஏப்ரல் 23, 2026 (வியாழன் வாக்குப்பதிவு நாள்)

மே 4, 2026 (திங்கள் வாக்கு எண்ணிக்கை நாள்)

## டிரம்ப் ஹார்முஸ் முற்றுகை எதிரொலியால் கரடி ஆதிக்கம்: கடும் சரிவுடன் தொடங்கிய பங்குச் சந்தை!




மும்பை, ஏப். 13–

மும்பை பங்குச் சந்தை கடந்த வாரத்தின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை வர்த்தகத்தில் குறியீடு எண் சென்செக்ஸ் 77550.25 புள்ளிகளுடன் நிறைவடைந்தது. வெள்ளிக்கிழமை வர்த்தகம் நிறைவடைந்த பிறகு, அமெரிக்கா– ஈரான் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை உடன்படிக்கை எதுவும் ஏற்படாமல் தோல்வியில் முடிந்தது. அதனைத் தொடர்ந்து ஹார்முஸ் ஜலசந்தி முற்றுகையிடப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து வாரத்தின் முதல் நாளான இன்று (திங்கட்கிழமை) வர்த்தகம் தொடங்கியதும் மும்பை பங்குச் சந்தை மற்றும் இந்திய பங்குச் சந்தை கடும் வீழ்ச்சியுடன் தொடங்கியது.

மும்பை பங்குச் சந்தை குறியீடு சென்செக்ஸ் 75937.16 புள்ளிகளுடன் வர்த்தகம் தொடங்கியது. 1612.99 புள்ளிகள் சரிவுடன் மும்பை பங்குச் சந்தை தொடங்கியது.

அதேபோல் இந்திய பங்குச் சந்தை குறியீடு நிஃப்டி வெள்ளிக்கிழமை 24050.60 புள்ளிகளுடன் நிறைவடைந்தது. இன்று 23589.60 புள்ளிகள் வர்த்தகம் தொடங்கியது. 462 புள்ளிகள் சரிவுடன் வர்த்தகம் தொடங்கியது. முக்கிய வங்கிகள் பங்குகள் கடும் சரிவை எதிர்கொண்டது. டிரம்ப் அறிவிப்பால் கச்சா எண்ணெய் விலை அதிகரித்தது. இதுவும் முக்கிய காரணமாகும்.

## பேச்சுவார்த்தை தோல்வி..

# தொடர்கிறது ஈரான் போர்!! தரமான சம்பவம் காத்திருக்கிறது?

### ஹார்முஸில் முற்றுகையிடும் அமெரிக்க கப்பற்படை!




ஈரான், ஏப். 13–

ஈரான் வசம் அணு ஆயுதங்கள் இருப்பது உலக நாடுகளுக்கு எல்லாம் ஆபத்தானது என கூறி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் ஈரான் மீது ராணுவ நடவடிக்கை எடுத்தன. பிப்ரவரி 28ஆம் தேதி தொடங்கிய போர் ஆயிரக்கணக்கான உயிர்களை பலிவாங்கி விட்டது. ஈரான் முக்கிய எண்ணெய் வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தியை மூடி போரில் தன்னுடைய பலத்தை காட்டியது. இதனால் பல நாடுகளிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே ஈரான் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. இதற்கிடையில் தான் கடந்த வாரம் இரு தரப்பு போர் நிறுத்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவும் ஈரானும் பாகிஸ்தானில் அமைதி பேச்சுவார்த்தை நடத்தின. ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்து இருக்கிறது. இதன் காரணமாக கடும் கோபம் அடைந்து இருக்கக்கூடிய அமெரிக்கா மீண்டும் தாக்குதல் தொடங்கப்படும் என அறிவித்திருக்கிறது.

கடும் ஆத்திரத்தில் இருக்கும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக நுழையும் மற்றும் வெளியேறும் அனைத்து கப்பல்களையும் அமெரிக்க கடற்படை முற்றுகையிடும் என அறிவித்திருக்கிறார். ஹார்முஸ் ஜலசந்தியை திறக்கவில்லை, மிக முக்கியமான அணுசக்தி விவகாரத்தில் ஈரான் இணக்கம் காட்டவில்லை எனவே உலகின் மிகச்சிறந்த அமெரிக்க கடற்படை ஹார்முஸில் நுழையும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் அனைத்து கப்பல்களையும் முற்றுகையிடும் பணி நாளை (14.04.2026)காலை 10 மணி முதல் தொடங்கும் என அறிவித்திருக்கிறார்.

மேலும் அமெரிக்க கடற்படை ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் ராணுவம் வைத்து இருக்கக்கூடிய அனைத்து கண்ணிவெடிகளையும் அழிக்கும் என தெரிவித்திருக்கிறார். ஈரானில் இருக்கக்கூடிய கொஞ்ச நஞ்சத்தையும் அழிக்க அமெரிக்க ராணுவம் தயாராக இருக்கிறது என டிரம்ப் கூறியிருக்கிறார். இதற்கிடையே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஈரான் போர் தொடர்கிறது என அறிவித்திருக்கிறார், தங்களின் எதிரி நாடு உயிர் வாழ போராடி வருகிறது என அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

ஈரான் போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நட்பு நாடுகளும் கை கொடுக்க முன்வராமல் இருப்பதால் அமெரிக்க அரசு சில அதிரடி நடவடிக்கைகளை எடுக்க ஆயத்தமாவதாக சொல்லப்படுகிறது. இதனால் இன்னும் சில வாரங்களுக்கு ஈரானில் அமைதி ஏற்படுவதற்கான வாய்ப்பே இல்லை என்கின்றனர் நிபுணர்கள். ஈரான் போர் நீடிப்பதும் ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல்கள் பயணிக்காமல் இருப்பதும் இந்தியா போன்ற நாடுகளுக்கு நல்லதல்ல. இதனால் எரிபொருள், உரம் உள்ளிட்ட தட்டுப்பாடுகளையும் விலைவாசி உயர்வு போன்ற சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

## போர் குறித்து கருத்து தெரிவித்த போப் லியோ; கடும் விமர்சனம் செய்த டிரம்ப்!





வாஷிங்டன், ஏப். 13–

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரால் மத்திய கிழக்கில் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இதனிடையே, கிறிஸ்தவ கத்தோலிக்க திருச்சபைகளின் தலைவரான போப் 14ம் லியோ வாடிகனில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முன் உரையாற்றினார். அப்போது, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பை போப் விமர்சித்தார். மேலும், மக்கள் மத்தியில் உரையாற்றிய போப், போர்கள் பிரிவினையை ஏற்படுத்தும். நம்பிக்கை அனைவரையும் இணைக்கும். தற்பெருமை, பணம் போதும். வலிமையை வெளிக்காட்டியதும்போதும். போர்களும் போதும். உண்மையான வலிமை வாழ்க்கையில் சேவை செய்வதில் வெளிப்பெளம். முட்டாள்தனமான போர்களில் இருந்து ஆட்சியாளர்கள் வெளியே வரவேண்டும். போர்களை நிறுத்துங்கள். இது அமைதிக்கான நேரம். மேஜைகளில் அமர்ந்து ஆயுதம், மரணங்களுக்கு திட்டமிடாலம் பேச்சுவார்த்தை மற்றும் மத்தியஸ்தத்தில் ஈடுபடுங்கள் என்று கூறினார்.

இந்நிலையில், போப் 14ம் லியோவின் கருத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் பதிலடி கொடுத்துள்ளார். தன்னை கிறிஸ்தவ மதக்கடவுள் இயேசு போல் சித்தரித்து தனது சமூகவலைதள பக்கத்தில் புகைப்படம் வெளியிட்ட டொனால்டு டிரம்ப், நான் போப் லியோவின் ரசிகன் அல்ல. போப் லியோ தனது பணியை சரிவர செய்வதாக நான் நினைக்கவில்லை. அவர் மிகவும் இடதுசாரி சிந்தனையாளராக உள்ளார். குற்றங்களில் போப் லியோ மிகவும் வலிமையற்றவர். வெளியுறவுக்கொள்கைகளிலும் அவர் மோசமானவர். ஈரான் அணு ஆயுதத்தை வைத்துக்கொள்ளட்டும் என நினைக்கும் போப் லியோ நமக்கு தேவையில்லை.

நான் வெள்ளைமாளிகையில் இல்லாவிட்டால் போப் லியோவும் வாடிகனில் இருக்கமாட்டார். போப் லியோ போப்புக்கான வேலைகளை மட்டும் பார்க்க வேண்டும். இடதுசாரி சிந்தனைகளை கைவிட்டு பொதுஅறிவுடன் சிந்த போப்பாக முயற்சிக்கவேண்டுமே தவிர அரசியல்வாதியாக மாற முயற்சிக்கக்கூடாது. அது போப் லியோவுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த கத்தோலிக்க தேவாலயங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்' இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 13.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 30-ம் தேதி

## ஈரான் முட்டுக்கட்டை! இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தை தோல்வி..!




உலக நாடுகளின் ஒட்டுமொத்த பார்வையும் இஸ்லாமாபாத் மீது திரும்பியிருக்க, 21 மணி நேரமாக நீடித்த அந்த முக்கிய பேச்சுவார்த்தை கடைசியில் பல்பு வாங்கிவிட்டது. அணு ஆயுத விவகாரத்தில் ஈரான் பிடி கொடுக்க மறுத்ததால், போர் நிறுத்தம் குறித்த நம்பிக்கைகள் தவிடுபொடியாகி உள்ளன. அமெரிக்க துணை தலைவர் ஜேடி வேன்ஸ், இந்த தோல்வியை மிகப்பெரிய கெட்ட செய்தி என்று வர்ணித்துள்ளது உலக அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் – அமெரிக்கா, இஸ்ரேல் இடையிலான பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில், குறிப்பாக அணு ஆயுத தயாரிப்பை கைவிட வலியுறுத்தி ஈரான் தாக்குதல் நடத்தப்பட்டன. ஒரு மாதத்திற்கும் மேலாக நீடித்த போரில், இரு தரப்புக்கும் கடும் பொருளாதார, உயிரிழப்பு சேதங்கள் ஏற்பட்டன. இதனிடையே ஈரான் – அமெரிக்கா இடையிலான போரை நிறுத்த பல நாடுகளும் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், இஸ்லாமாபாத்தில் நடந்த 21 மணி நேர அமைதி பேச்சு வார்த்தையானது தோல்வி அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்காக அமெரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ் தலைமையிலான குழு நேரடியாக ஈரான் அதிகாரிகள் குழுவை சந்தித்து ஆலோசனை நடத்தின. இந்த பேச்சு வார்த்தையில் அமைதி ஒப்பந்தம் போடப்படலாம் என பல தரப்பிலும் பலத்த எதிர்பார்ப்புகள் நிலவி வந்தது. ஆனால் அந்த எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கையையும் சுக்குநூறாக உடைக்கும் விதமாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

ஈரான் அணு ஆயுதம் குறித்த ஒப்பந்தத்திற்கு ஈரான் மறுப்பு தெரிவித்துள்ளதாகவும், இதனால் இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததாகவும் வேன்ஸ் உறுதிபடுத்தியுள்ளார். இதில் கவலை அளிக்கும் விஷயம் , இந்த தோல்வி அமெரிக்காவை விட ஈரானுக்கு கெட்ட செய்தி. எங்களின் எதிர்பார்ப்புகளை நாங்கள் மிக தெளிவாக கொடுத்து விட்டோம். ஆனால் நிபந்தனைகளை ஏற்க வேண்டாம் என அவர்கள் முடிவு செய்துள்ளனர். அமெரிக்கா மற்றும் ஈரான் தூது குழுக்கள் பல சுற்றுகளாக விவாதங்களை நடத்தினாலும், ஈரானின் அணு ஆயுத உற்பத்தியில் இரு தரப்புக்கும் இடையே இருந்த இடைவெளியை குறைக்க முடியவில்லை.

உண்மை என்னவென்றால், ஈரான் அணு ஆயுதங்களை தேடாது என்பதற்கும், அணு ஆயுதங்களை விரைவாக உருவாக்குவதற்கு தேவையான கருவிகளை பெற முயற்சி செய்யாது என்பதற்கும் ஒரு உறுதியான உறுதிமொழியை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதுவே அமெரிக்க அதிபரின் முதன்மையான இலக்காகவும் உள்ளது. அதைத்தான் நாங்கள் இந்த பேச்சுவார்த்தைகளின் மூலம் அடைய முயன்றோம். ஆனால் ஈரான் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

இந்த 21 மணி நேர பேச்சுவார்த்தையின் தோல்விக்கு முக்கிய காரணம், ஈரானின் அணுசக்தி விவகாரத்தில் நிலவும் உடன்பாடற்ற சூழலே ஆகும். இதுவே இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய முட்டுக்கட்டைக்கு மிக முக்கியமான காரணமாகவும் அமைந்துள்ளது. மொத்தத்தில் இனி மீண்டும் பதற்றம் அதிகரிக்கும். அதனால் கச்சா எண்ணெய் விலை, பங்குச் சந்தை, தங்கம் என ஒவ்வொன்றும் வேலையை காட்ட ஆரம்பிக்கலாம். மேலும் மத்திய கிழக்கு பகுதிகளில் மீண்டும் பதற்றம் அதிகரிக்கும். ஹார்மூஸ் ஜலசந்தியிலும் பிரச்சனையும் அதிகரிக்கலாம். சர்வதேச எரிபொருள் சந்தை இனி என்னவாகும் என்ற கவலையும் எழுந்துள்ளது. இது இந்தியா போன்ற நாடுகளின் அடுப்பங்கரை வரையில் இன்னும் என்னென்ன பிரச்சனைகளை எல்லாம் ஏற்படுத்த போகிறதோ தெரியவில்லை...

## நொய்டாவில் ஊதிய உயர்வு கோரி தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது!



உத்தரப்பிரதேசம், ஏப். 13–

நொய்டாவில் ஊதிய உயர்வுகோரி தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் ஊதிய உயர்வு கேட்டு தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

உத்தர பிரதேச பாஜக அரசைக் கண்டித்து தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தக் கோரி நொய்டாவில் உள்ள தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

2 நாட்களாக போராட்டம் நடந்துவந்த நிலையில், 3வது நாள் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. வன்முறையில் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன; சில கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. நொய்டாவில் தொழிலாளர்கள் போராட்டத்தின்போது கல் வீச்சு சம்பவமும் நடந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. வன்முறையில் ஈடுபட்ட தொழிலாளர்களை போலீசார் தடியடி நடத்தி விரட்டியடித்தனர்.

## கேரளா- திருச்சி ரயில் வழித்தடத்தில் முக்கிய மாற்றம்?



திருச்சி, ஏப். 13–

பயணிகள் வசதியையும், ரயில்களின் வேகத்தையும் உயர்த்தும் நோக்கில் தென்னக ரயில்வே முக்கியமான மேம்பாட்டு பணிகளை தொடங்கியுள்ளது. குறிப்பாக திருச்சி திருவனந்தபுரம் வழித்தடத்தில் ரூ.92.31 கோடி செலவில் சிக்னல் அமைப்புகளை நவீனமயமாக்கும் திட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

**130 கிமீ வேகத்தில் ரயில்கள் பெரிய மாற்றம்:**

இந்த மேம்பாட்டு பணிகள் நிறைவடைந்தவுடன், இந்த வழித்தடத்தில் ரயில்கள் மணிக்கு 130 கிலோமீட்டர் வேகத்தில் இயக்கப்பட முடியும். தற்போது இயங்கும் பல விரைவு ரயில்களின் வேகம் இதனால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும். குறிப்பாக அனந்தபுரி எக்ஸ்பிரஸ், தாம்பரம் கொல்லம் உள்ளிட்ட முக்கிய ரயில்கள் இந்த உயர்ந்த வேகத்தில் பயணிக்க வாய்ப்பு கிடைக்கும்.

**திட்டத்தின் செலவுகள் மற்றும் பிரிவுகள்:**

இந்த திட்டம் பல கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது:

திருச்சி திண்டுக்கல் (96 கி.மீ): ரூ.25.7 கோடி

திண்டுக்கல் திருநெல்வேலி (220 கி.மீ): ரூ.37.14 கோடி

திருநெல்வேலி திருவனந்தபுரம் (142 கி.மீ): ரூ.29.42 கோடி

இந்தப் பணிகள் முடிந்த பிறகு, திருவனந்தபுரம் காயம்குளம் உள்ளிட்ட பகுதிகளிலும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.


**ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள வேகப்பாதைகள்:**

இந்திய ரயில்வே துறை சார்பில் சென்னை அரக்கோணம், சென்னை குண்டூர் மற்றும் அரக்கோணம் ஜோலார்பேட்டை வழித்தடங்களில் ஏற்கனவே 130 கிமீ வேகத்தில் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதேபோன்று தமிழகத்தின் பல்வேறு வழித்தடங்களிலும் இந்த வேகத்தை கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

**மேலும் மேம்படுத்தப்படும் பாதைகள்;**

சென்னை திருச்சி, ஜோலார்பேட்டை கோவை உள்ளிட்ட முக்கிய பாதைகளிலும் இதேபோன்ற சிக்னல் நவீனமயமாக்கும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. அரக்கோணம் ஜோலார்பேட்டை பிரிவில் நடைபெறும் பணிகள் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சி.பி.எஸ்.சி. மாணவர்கள்! 3 லட்சம் ஆசிரியர்களுக்கு முக்கிய செய்தி?



புதுடெல்லி, ஏப். 13–

நாடு முழுவதும் லட்சக்கணக்கான மாணவர்கள் ஆவலுடன் காத்திருக்கும் சிபிஎஸ்இ 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்த அதிகாரப்பூர்வ அதிகரிப்பு விரைவில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிபிஎஸ்இ தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரியான சன்யம் பரத்வாஜ் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிவிப்பில், அனைத்து தேர்வு மைய கண்காணிப்பாளர்கள் மற்றும் பள்ளி முதல்வர்கள் தங்கள் OECMS போர்ட்டலில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் சில பள்ளிகள் பணியாளர்கள் அல்லது மாணவர்களின் எண்ணிக்கை குறித்து தவறான தகவல்களை வழங்கியதால், ஒருங்கிணைந்த கட்டண முறையில் (IPS) தவறான பணக் கோரிக்கைகள் உரு வானது கண்டறியப்பட்டது. இதற்கு தீர்வாக இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. தேர்வு மையங்களு க்கான பணம் வழங்கும் IPS முறை, முழுமையாக OECMS போர்ட்டலில் இருந்து பெறப்படும் தானியங்கி தரவுகளையே நம்பியுள்ளது. எனவே நிதி தொடர்பான தவறுகளை தவிர்க்க, பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள், மாணவர்களின் வருகை (வருகை தந்தோர் மற்றும் வராதோர்) மற்றும் பயன்படுத்தப்பட்ட தேர்வு அறைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை பள்ளிகள் இப்போது கட்டாயம் சரிபார்க்க வேண்டும்.

தங்கள் தரவுகளில் ஏதேனும் பிழைகள் அல்லது விடுபட்ட தகவல்கள் இருப்பதை கண்டறியும் பள்ளிகள், திருத்தப் பணிகளை மேற்கொள்ள ஏப்ரல் 11, 2026க்குள் அந்தந்த மண்டல அலுவலகங்களை தொடர்பு கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்த பட்டிருந்தது. தரவுகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த, அனைத்து திருத்தங்களும் மண்டல அதிகாரிகளின் ஆலோசனையின் பேரிலேயே செய்யப்பட வேண்டும். இந்த முழு செயல்முறையும் ஏப்ரல் 13, 2026க்குள் முடிக்கப்பட வேண்டும் என சிபிஎஸ்இ கெடு விதித்துள்ளது. இந்த காலக்கெடு முடிந்த பிறகு, தரவுகளை மாற்ற கோரும் எந்த ஒரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படாது. பொதுத் தேர்வுகள் முடிந்தவுடன் இறுதி பணிகளை வழங்குவதற்கான IPS முறை தொடங்கப்படும் என்பதால், தேர்வு மையங்கள் தங்கள் நிர்வாக சேவைகளுக்கான சரியான ஊதியத்தை பெற இதுவே கடைசி வாய்ப்பாகும்.

## ஏப்ரல் 13 - 19 வரை வங்கிகளுக்கு சரமாரி விடுமுறை?




சென்னை, ஏப். 13–

ஏப்ரல் 13 முதல் ஏப்ரல் 19 வரை இந்தியாவிலுள்ள பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள் பல்வேறு பண்டிகைகளை முன்னிட்டு 4 நாட்கள் வரை மூடப்பட வாய்ப்புள்ளது. அம்பேத்கர் ஜெயந்தி, தமிழ் புத்தாண்டு எனத் தொடர் விடுமுறைகள் வருவதால், வங்கி பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவது நல்லது. விடுமுறை நாட்களின் முழு விவரங்கள்! ரிசர்வ் வங்கி (RBI) காலண்டர் படி அடுத்த வார விடுமுறை பட்டியல் இதோ:

**ஏப்ரல் 14 (செவ்வாய்):**

அம்பேத்கர் ஜெயந்தி, தமிழ் புத்தாண்டு, விஷு புண்ணியகாலம், வைசாகி, போஹாக் பிஹு போன்ற பண்டிகைகளுக்காக சென்னை, பெங்களூரு, மும்பை, கொல்கத்தா, அகர்தலா, அகமதாபாத், பெலாபூர், புவனேஸ்வர், டேராடூன், காங்டாக், குவஹாத்தி, ஹைதராபாத், இம்பால், ஜெய்ப்பூர், ஜம்மு, கான்பூர், கொச்சி, கொல்கத்தா, லக்னோ, மும்பை, நாக்பூர், பனாஜி, பாட்னா, ராஞ்சி, திருவனந்தபுரம், விஜயவாடா உட்பட இந்தியாவின் பெரும்பாலான நகரங்களில் வங்கிகள் இயங்காது. ஆக வங்கிகளுக்கு செல்லும் முன்பு இதை உறுதி செய்து கொள்ளுங்கள். இந்த நாளில் வங்கி வேலைகள் இருந்தால் முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

**ஏப்ரல் 15 (புதன்):**

போஹேலா பைசாக் (பெங்காலி புத்தாண்டு), ஹிமாச்சல் தினம் மற்றும் பிஹு பண்டிகையை முன்னிட்டு, அகர்தலா, பெலாபூர், புவனேஸ்வர், சென்னை, டேராடூன், காங்டாக், குவஹாத்தி, ஹைதராபாத், இம்பால், இட்டாநகர், கொச்சி, கொல்கத்தா, லக்னோ, மும்பை, நாக்பூர், பனாஜி, பாட்னா, ராஞ்சி, சிம்லா, ஸ்ரீநகர், திருவனந்தபுரம், விஜயவாடா உள்ளிட்ட பகுதிகளில் விடுமுறை.

**ஏப்ரல் 16 (வியாழன்):**

போஹாக் பிஹு பண்டிகையை முன்னிட்டு இட்டாநகர், கொச்சி, திருவனந்தபுரம், கொல்கத்தா போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் வங்கி களுக்கு விடுமுறையாக இருக்கலாம்.

ஏப்ரல் 19 (ஞாயிறு): வாராந்திர விடுமுறை என்பதால் நாடு முழுவதும் வங்கிகள் மூடப்பட்டிருக்கும்.

ஏப்ரல் 18 சனிக்கிழமை மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமை என்பதால், அன்று வங்கிகள் வழக்கம்போல செயல்படும். வங்கி கிளைகள் மூடப்பட்டு இருந்தாலும், உங்கள் அவசரத் தேவைகளுக்கு, ATM சேவைகள் மூலம் பணம் எடுக்கவும், பேலன்ஸ் செக் செய்யவும் ஏடிஎம்கள் எப்போதும் போல செயல்படும்.

**ஆன்லைன் பேங்கிங்:**

மொபைல் பேங்கிங் மற்றும் நெட் பேங்கிங் மூலம் பணப் பரிமாற்றம் (IMPS, NEFT, RTGS) செய்யலாம்.

**டிஜிட்டல் பரிவர்த்தனை:**

UPI (GPay, PhonePe) மூலம் வழக்கம்போல பணம் அனுப்பவும் பெறவும் முடியும். இருப்பினும், காசோலை (Cheque) மூலம் பணம் செலுத்துவது, பெறுவது, மேலாளரை நேரில் சந்திப்பது போன்ற பணிகளுக்கு வங்கி விடுமுறை நாட்களை தவிர்த்து மற்ற நாட்களில் செல்லலாம்.

இருப்பினும் மாநிலத்திற்கு மாநிலம் விடுமுறை நாட்கள் மாறுபடும் என்பதால், உங்கள் உள்ளூர் வங்கி கிளையை ஒரு முறை சரிபார்த்து கொள்ளுங்கள்.

## தவறுதலாக தாக்குதல்..! நைஜீரியாவில் அதிர்ச்சி சம்பவம்..! பலி 100!!



வடகிழக்கு நைஜீரியாவில், பரபரப்பான உள்ளூர் சந்தை ஒன்றின் மீது தவறுதலாகத் தாக்குதல் நடத்தப்பட்ட ராணுவ வான்வழித் தாக்குதலில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



பழனி முருகன் கோவில் ரோப் கார் சேவை வரும் ஏப்ரல் 16ஆம் தேதி ஒரு நாள் மாதாந்திர பராமரிப்புக்காக இயங்காது. என்று பழனி கோவில் நிர்வாகம் கூறியுள்ளது



## பராபவ வருட தமிழ் புத்தாண்டு 2026: ராசிபலன்களும் அதிரடி மாற்றங்களும்!




கல்வி மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளில் இருப்பவர்களுக்கு இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு லாபகரமானதாக அமையும். ஏழரைச் சனியின் பிடியில் இருப்பவர்கள் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் எதிர்மறை விளைவுகளைக் குறைத்து நற்பலன்களைப் பெறலாம்.

மங்களகரமான பராபவ வருடம் எனப்படும் 2026–ஆம் ஆண்டு தமிழ் புத்தாண்டு, ஏப்ரல் 14–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று பிறக்கிறது. இந்த ஆண்டு நவகிரகங்களின் சஞ்சாரத்தின்படி, குறிப்பாக குரு பகவான் மிதுன ராசியிலிருந்து தனது உச்ச வீடான கடக ராசிக்கு இடம்பெயர்வதும், சனி பகவான் மீன ராசியில் சஞ்சரிப்பதும் அனைத்து ராசிகளுக்கும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கும். இந்த ஆண்டில் ஆன்மீகம் தழைத்தோங்கும் அதே வேளையில், மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தில் சில சவால்களைச் சந்திக்க நேரிடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, விவசாயம் மற்றும் பால் உற்பத்தி சார்ந்த தொழில்கள் பெரும் மேன்மையடையும்.

**மேஷம் முதல் கடகம் வரை: புதிய முயற்சிகளும் சவால்களும்**

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு கலவையான பலன்களையே வழங்கப்போகிறது. குருவின் பார்வை நான்காம் இடத்திற்கு மாறுவதால் சொந்த வீடு, வாகன யோகம் கூடிவரும் என்றாலும், ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. ரிஷப ராசியினருக்கு இந்த ஆண்டு செல்வாக்கு மற்றும் மரியாதையில் பெரும் வளர்ச்சியைத் தரும்; தடைப்பட்ட திருமண காரியங்கள் கைகூடும். மிதுன ராசியினர் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும், உழைப்பிற்கு ஏற்ற வருமானம் வந்தாலும் தேவையற்ற கடன்களைத் தவிர்ப்பது நல்லது. கடக ராசியினருக்கு இழந்த செல்வாக்கை மீட்கும் ஆண்டாக இது அமையும்; புதிய வேலை வாய்ப்புகளும், குழந்தை பாக்கியமும் உண்டாகும்.

**சிம்மம் முதல் விருச்சிகம் வரை: தொழில் மற்றும் பொருளாதார நிலை**

சிம்ம ராசியினருக்கு அட்டம சனி காலம் என்பதால் நிதானம் மிக அவசியம்; வரவு இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கன்னி ராசிக்காரர்களுக்கு கண்டக சனியின் தாக்கம் இருந்தாலும், குருவின் அருளால் தொழில் ரீதியான மாற்றங்கள் சாதகமாக அமையும். துலாம் ராசியினருக்கு தர்ம கர்மாதிபதி யோகம் கிடைப்பதால் சமூகத்தில் அந்தஸ்து உயரும், வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடும். விருச்சிக ராசியினருக்கு ஐந்தாம் இடத்து சனி புண்ணிய பலன்களைத் தரும்; இருப்பினும் குரு எட்டாம் இடத்தில் இருப்பதால் நிதி விஷயங்களில் பெரிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு முதல் மீனம் வரை: முன்னேற்றத்திற்கான வழிகள்**

தனுசு ராசியினருக்கு நான்காம் இடத்து சனியால் வீட்டுப் பொறுப்புகள் அதிகரிக்கும், ஆனால் குருவின் ஏழாம் பார்வை திருமண வாழ்வை இனிமையாக்கும். மகர ராசியினருக்கு ஏழரைச் சனியின் தாக்கம் முடிவுக்கு வருவதால் நீண்ட காலத் துயரங்கள் நீங்கி, புதிய உற்சாகத்துடன் செயல்படுவார்கள். கும்ப ராசியினருக்கு ஜென்மச் சனியின் பிடி தளர்வதால் நிம்மதி கிடைக்கும், குருவின் ஆறாம் இடத்து சஞ்சாரம் ஆரோக்கியத்தில் சிறிய பாதிப்புகளைத் தரலாம். மீன ராசியினருக்கு ஜென்மச் சனியின் காலம் என்பதால் மனக்குழப்பங்களைத் தவிர்த்து, குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வது மன அமைதியைத் தரும்.

**எச்சரிக்கைகளும் பொதுவான பரிகாரங்களும்**

இந்த பராபவ ஆண்டில் பரணி, மகம், பூரம் மற்றும் பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது. குறிப்பாக இணையவழி மோசடிகள் மற்றும் புதிய வைரஸ் நோய்கள் பரவ வாய்ப்புள்ளதால் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கை வழிபாடு செய்வதும், இயலாதவர்களுக்கு அன்னதானம் வழங்குவதும் இந்த ஆண்டில் ஏற்படும் கிரக தோஷங்களை நீக்கி வாழ்வில் வளத்தை சேர்க்கும். நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் செயல்படுபவர்களுக்கு இந்த ஆண்டு நிச்சயம் ஒரு பொற்காலமாக அமையும்.

## ராமதாஸ் உடல்நிலை: மருத்துவர் பேட்டி!



சேலம், ஏப். 13–

சேலம் மாவட்டம் பள்ளப்பட்டியில் நேற்று பிரசாரத்தை முடித்து விட்டு இறங்கிய போது மயக்கமடைந்து கீழே சரிந்து விழுந்த ராமதாஸை அவரது கட்சி தொண்டர்கள் தாங்கி பிடித்தனர். உடனடியாக சேலம், குரங்குச்சாவடி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் ராமதாஸுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்பு சீலநாயக்கன்பட்டியில் உள்ள மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். தற்போது சேலம் மருத்துவமனையில் இருந்து சென்னைக்கு அழைத்து வரப்படுகிறார். சென்னையில் உள்ள அப்போலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில், ராமதாஸ் நலமுடன் உள்ளார் என்றும், 2 நாட்கள் ஓய்வுக்கு பின்பு மீண்டும் பரப்புரைக்கு போகலாம் என்றும் மருத்துவர் ராஜேஷ் என்பவர் தெரிவித்துள்ளார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## சிக்கன் ஈரல், மட்டன் ஈரல் நல்லது தான்.. ஆனால் இந்த பிரச்சனை உள்ளவர்கள் சாப்பிடக் கூடாது..!



நம்மில் பலருக்கு இறைச்சி மிகவும் பிடிக்கும். தினமும் அசைவ உணவு உண்பவர்களும் இருக்கிறார்கள். அதிலும் ஈரலில் ஊட்டச்சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளன. ஆனால், சிலர் தவறுதலாகக் கூட ஈரலைச் சாப்பிடக்கூடாது. குறிப்பாக, சில உடல்நலப் பிரச்சனைகளால் அவதிப்படுபவர்கள் தவறுதலாகக் கூட ஈரலைச் சாப்பிடக்கூடாது. யார் அதைச் சாப்பிடக்கூடாது? ஏன் என்பதை விரிவாக பார்க்கலாம்.

**இந்தப் பிரச்சினைகள் உள்ளவர்கள் சாப்பிடவே கூடாது:**

**அதிக கொலஸ்ட்ரால்:** கல்லீரலில் அதிக அளவு கொலஸ்ட்ரால் உள்ளது. மேலும், எல்.டி.எல் (கெட்ட கொலஸ்ட்ரால்) அதிகரிப்பதற்கும் அதிக வாய்ப்புள்ளது. இதயம் தொடர்பான பிரச்சனைகளும் ஏற்படுகின்றன. எனவே, இதய நோயாளிகளும், அதிக கொலஸ்ட்ரால் உள்ளவர்களும் கோழி மற்றும் ஆட்டுக் கல்லீரலை முற்றிலுமாகத் தவிர்ப்பது நல்லது.

**இரத்த அழுத்தம் மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள்:** கல்லீரலில் சோடியம் மற்றும் கொழுப்பின் அளவு அதிகமாக உள்ளவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதனால்தான், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காதவர்கள் இந்த உணவைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

**சிறுநீரக பிரச்சனை:** கல்லீரலில் உள்ள அதிகப்படியான புரதம் மற்றும் கனிமச்சத்துக்கள் சிறுநீரகங்களுக்குக் கூடுதல் அழுத்தத்தை அளிக்கின்றன. கிரியேட்டின் அளவு அதிகரிக்கக்கூடும். அதனால்தான், சிறுநீரகம் தொடர்பான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டவர்கள் கோழிக்கறி மற்றும் ஆட்டுக்கறி ஈரல் போன்றவற்றைச் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கர்ப்பிணி பெண்கள்:** ஆட்டிறைச்சி மற்றும் கோழி ஈரலில் வைட்டமின் ஏ நிறைந்துள்ளது. இவற்றை அதிகமாக உட்கொள்வது கருவின் வளர்ச்சியைப் பாதிக்கும். அவை ஹார்மோன் சமநிலையின்மையை ஏற்படுத்தக்கூடும். எனவே, மருத்துவரின் அனுமதியின்றி இவற்றை உட்கொள்ளக்கூடாது.

**தசைக்கோளாறு பிரச்சனை:** ஈரலில் புரதச்சத்து அதிகமாக உள்ளது. அதிகப்படியான புரதத்தை உட்கொள்வது தசை நோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது. நோயெதிர்ப்பு மண்டல பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்தகையவர்கள் ஈரல் போன்ற உணவுகளையும் தவிர்க்க வேண்டும்.

**சிறு குழந்தைகள்:** சிறு குழந்தைகளுக்கும் ஈரல் கொடுக்கக் கூடாது. இதை அறவே கொடுக்கக் கூடாது என்பதல்ல, ஆனால் அளவுக்கு அதிகமாகக் கொடுக்கக் கூடாது. குழந்தைகளுக்கு அதிக ஈரல் கொடுப்பது செரிமானப் பிரச்சனைகளை ஏற்படுத்தும். எனவே, இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஈரல் கொடுக்காமல் இருப்பது நல்லது. அப்படியே கொடுத்தாலும், மிகக் குறைவாகவே கொடுக்க வேண்டும்.

ஈரல் உண்பவர்கள் சில விதிகளை நினைவில் கொள்ள வேண்டும். வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறைக்கு மேல் அதை உண்ணக்கூடாது. அது நன்கு வெந்த பின்னரே உண்ண வேண்டும். தரமான இறைச்சியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தினமும் அதை உண்பது யாருக்கும் ஆபத்தானது.

# நியூசிலாந்தில் கடும் சேதத்தை ஏற்படுத்திய வையானு புயல்.!!



நியூசிலாந்து, ஏப் 13–

அண்மையில் நியூசிலாந்தின் வட தீவில் கரையை கடந்த வையானு (Vaianu) புயல் காரணமாக அந்நாட்டில் பெரும் வெள்ளப்பெருக்கு மற்றும் மின்வெட்டு ஏற்பட்டதோடு, நூற்றுக்கணக்கானோர் அவர்கள் வசித்த இடத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

மணிக்கு 130 கி.மீ–க்கும் அதிகமான வேகத்தில் வீசிய புயல் காற்றானது கனமழை மற்றும் பெரிய அலைகளுடன், மகேது தீபகற்பத்திற்கு அருகே கரையைக் கடந்ததாக அந்த நாட்டின் தேசிய வானிலை ஆய்வு மையமான மெட்சர்வீஸ் தகவல் தெரிவித்துள்ளது. மேலும், வையானு புயலை "உயிருக்கு அச்சுறுத்தலான" ஒரு இயற்கை சீற்றம் என்றும் அது விவரித்துள்ளது.

வையானு புயலால் ஏற்பட்ட சேதங்களைச் சீரமைக்கும் பணியின் ஒரு பகுதியாக, இன்று மாநில நெடுஞ்சாலைகள் முழுவதும் நிலச்சரிவுகள், வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் சிறு பாலங்களைச் சீரமைக்கும் பணியில் மீட்பு குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

சாலைகளை பயன்படுத்துவோர் விழிப்புடன் இருக்குமாறும், அவர்கள் செல்லும் இடத்தில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப வாகனங்களை இயக்குமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். இதனிடையே இந்தப் புயல் வட தீவின் விளிம்புகளை நோக்கி நகர்ந்ததால், நாட்டின் அதிக மக்கள்தொகை கொண்ட நகரமான ஆக்லாந்து மிக மோசமான பாதிப்புகளிலிருந்து தப்பித்ததாக நியூசிலாந்தின் அவசரநிலை மேலாண்மை அமைச்சர் மார்க் மிட்செல் கூறினார்.

இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள மார்க் மிட்செல் நாங்கள் எத்தகைய தீவிரத்தை எதிர்கொள்ளத் தயாராக இருந்தோமோ அல்லது எத்தகைய தாக்கத்திற்கு ஆளாவோம் என்று எதிர்பார்த்தோமோ, அந்த அளவுத் தீவிரத்தை நல்வாய்ப்பாக முழுமையாக எதிர்கொள்ளவில்லை, கடும் சேதத்திற்கு மத்தியில் இது ஒரு நல்ல செய்தி என்று கூறினார். இதனிடையே சூழல் சீரடைந்து வருவதால், Bay of Plenty உள்ளிட்ட வட தீவுப் பகுதிக்கான பெரும்பாலான வானிலை எச்சரிக்கைகளும் கண்காணிப்பு அறிவிப்புகளும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன.

மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில் தற்போதும் சில பகுதிகளில் மின்சார விநியோகம் இன்னும் சீராகவில்லை என்பதோடு, வெள்ளப்பெருக்கு மற்றும் சிதறிக் கிடக்கும் குப்பைக் கழிவுகள் காரணமாக முக்கியச் சாலைகளில் சில இன்னும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கியாஸ் சிலிண்டர் விநியோகம் குறித்து பொதுமக்கள் கவலைப்பட வேண்டாம்!



சென்னை, ஏப். 13–

எண்ணெய் நிறுவனங்களின் (ஐ.ஓ.சி.எல்., பி.பி.சி.எல்., எச்.பி.சி.எல்.) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர் வி.சி.அசோகன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:– தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலம் முழுவதும் வீட்டு உபயோக எல்பிஜி விநியோகம் தற்போது எந்தவித தடையும் இல்லாமல், முறையாகவும் பாதுகாப்பாகவும் நடைபெற்று வருகிறது. இந்தியன் ஆயில் மற்றும் பிற எண்ணெய் நிறுவனங்களின் சார்பில், எல்பிஜி சிலிண்டர்கள் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளன. விநியோக ஏற்பாடுகள் வலுவாக உள்ளன. எங்கள் நிரப்பும் ஆலைகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் விநியோக அமைப்புகள் ஒருங்கிணைந்த முறையில் திறம்பட செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம், பொதுமக்கள் தங்களுடைய வழக்கமான சுழற்சியில் எந்தவித சிரமமும் இன்றி பெற முடிகிறது. எனவே, தேவையற்ற கவலை கொள்ள வேண்டாம் என்றும், பீதியுடன் எல்பிஜி சிலிண்டர்களை முன்பதிவு செய்வதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் பெட்ரோல்–விநியோகமும் டீசல் முறையாக நடைபெற்று வருகிறது. அனைத்து முக்கிய முனையங்கள் மற்றும் கிடங்குகளிலும் போதுமான அளவு கையிருப்பு உள்ளது.

சுத்திகரிப்புநிலையங்களில் இருந்து சில்லறை விற்பனை நிலையங்கள் சீராக இயங்கி வருகிறது. எங்கும் பற்றாக்குறை ஏற்படாதவாறு எண்ணெய் தொழில் துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. வர்த்தக எல்பிஜி விநியோகத்தைப் பொறுத்தவரை, அரசு வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஒரு திட்டமிட்ட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுகிறது. இதில், சுமார் 70 சதவீதம் அளவிற்கு மருத்துவனைகள், பள்ளிகள், முதியோர் இல்லங்கள், சமுதாய சமையலறைகள், கல்லூரி விடுதிகள், தொழிற்சாலை உணவகங்கள் போன்ற அத்தியாவசிய மற்றும் முன்னுரிமைத் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


# மேற்கு வங்காளத்தில் மேலும் 12 போலீஸ் உயர் அதிகாரிகள் இடமாற்றம்!

கொல்கத்தா, ஏப். 13–

மேற்கு வங்காள சட்டசபைக்கு வருகிற 23 மற்றும் 29–ந்தேதிகளில் 2 கட்டமாக வாக்குப்பதிவு நடக்க உள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்டதும் இங்கு சுமார் 500 அரசு அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதாக ஆளும்கட்சியாக இருக்கும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவரான மம்தா பானர்ஜி குற்றம் சாட்டினார். பா.ஜனதாவினருக்கு ஆதரவாக செயல்படும் பலர் தேர்தல் அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். இந்த நிலையில் அங்கு மேலும் 12 போலீஸ் அதிகாரிகள் தேர்தல் கமிஷனால் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ள தகவல் வெளியாகி இருக்கிறது. சி.ஐ.டி. பிரிவு போலீஸ் டி.ஐ.ஜி.யாக இருந்த சோமாதாஸ் மித்ரா, குற்றப்பிரிவு இணை கமிஷனராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

இதேபோல சிறப்பு அதிரடிப்படை டி.ஐ.ஜி. தேபஸ்மிதா தாஸ், கொல்கத்தா உளவுப்பிரிவு இணை கமிஷனராக மாற்றப்பட்டார். இதேபோல 12 அதிகாரிகளை இடமாற்றம் செய்து தேர்தல் கமிஷன் உத்தரவு பிறப்பித்து உள்ளது.

# ஹார்முஸ் நீரிணையில் கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க முடியாமல் திணறும் ஈரான்!



ஈரான், ஏப். 13–

ஹார்முஸ் நீரிணையில் ஈரான் பொருத்திய கண்ணிவெடி களைக் கண்டறிய அந்நாட்டு படைகளால் முடியவில்லை எனவும், அவை கடலின் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் நீரிணை கடல்பகுதியில், கண்ணிவெடிகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியாததால் நீரிணையை முழுமையாக திறப்பதில் சிக்கல் நீடிக்கிறது. கடலுக்கு மேலே மிதந்த கண்ணிவெடிகளை ஈரான் ராணுவம் அகற்றியது. கடலுக்கு சில நூறு அடி ஆழத்தில் எங்கெல்லாம் கண்ணிவெடிகள் வீசப்பட்டன என்பது குறித்து தெளிவான விவரங்கள் இல்லாததால் சிரமம் ஏற்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட ராணுவ வரைபடத்தின்படி நடக்காமல், அவசர அவசரமாகச் செய்யப்பட்டதால், எந்தெந்த இடங்களில் கண்ணிவெடிகள் வைக்கப்பட்டுள்ளன என்பதற்கான துல்லியமான தரவுகள் ஈரானிடம் இல்லாமல் போய்விட்டது. பொதுவாக கண்ணிவெடிகளை வைப்பது எளிது. ஆனால் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து அகற்றுவது மிகவும் கடினமான பணி. தற்போது அவற்றை அகற்றத் தேவையான நவீனத் தொழில்நுட்பம் ஈரானிடம் போதிய அளவு இல்லாததால் சிக்கல் நீடிக்கிறது.

# வேலை வாய்ப்பு

## இந்திய வங்கியில் 350 காலியிடங்கள்!

**Indian Bank Recruitment 2026**

- **Vacancy: 350**
- **Post Name: Specialist Officers (SO)**
- **Qualification: B.E/B.Tech, MBA, MCA, M.Sc, CA/ ICMA/ CFA**
- **Selection Process: Written test, Interview**

நிறுவனத்தின் பெயர்: இந்தியன் வங்கி

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 350 சிறப்பு அலுவலர் (SO) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்


தொடங்கும் தேதி: 08.04.2026

கடைசி தேதி: 28.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://indianbank.bank.in/

# புகழ்பெற்ற சுற்றுலா தலத்தில் கூட்ட நெரிசல்; 30 பேர் பலி!




போர்ட் அவ் பிரின்ஸ், ஏப். 13–

கரீபியன் கடலில் அமைந்துள்ள தீவு நாடுகளில் ஹைதியும் ஒன்றாகும். இந்நாட்டில் உள்ள மலைகள், கடற்கரைகள், பாரம்பரிய சின்னங்களை காண லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிவது வழக்கம்.

குறிப்பாக, வடக்கு ஹைதியின் மிலாட் நகரில் மலை மீது சிடடெல் ஹென்றி என்ற லபெரியர் கோட்டை உள்ளது. பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்றபிறகு புரட்சியாளர் ஹென்றி கிறிஸ்டோப் தலைமையில் இந்த மலைக்கோட்டை கட்டப்பட்டது. உலக புகழ்பெற்ற சுற்றுலா தலமாக திகழும் இந்த மலைக்கோட்டையில் வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறையை முன்னிட்டு நேற்று திருவிழா நடைபெற்றது. இதில் உள்ளூர், வெளிநாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் கலந்துகொண்டனர். அப்போது அங்கு திடீரென கனமழை பெய்தது. இதனால் அங்கிருந்தவர்கள் மழையில் நனைந்துவிடாமல் இருக்க பாதுகாப்பான இடங்களை தேடி ஓடினர். அப்போது சுற்றுலாப்பணிகளிடையே தள்ளுமுள்ளு எற்பட்டு அது கூட்டநெரிசலாக மாறியது.

இந்த கூட்டநெரிசலில் சிக்கி பெண்கள் உள்பட 30 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 70க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## சினிமா துளிகள்..!

### மீண்டும் இணையும் இருமுகன் கூட்டணி?



நடிகர் விக்ரம் மற்றும் இயக்குநர் ஆனந்த் சங்கர் இணையும் திரைப்படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தகவல். இந்தப் படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்க உள்ளதாகவும், ஒளிப்பதிவு பணிகளை ஆர்.டி. ராஜசேகர் மேற்கொள்வதாகவும் கூறப்படுகிறது.

இந்திய மதிப்பில் ரூ. 50 முதல் ரூ. 55 கோடி பட்ஜெட்டில் தயாராகும் இந்தப் படத்தை சத்ய ஜோதி ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்தப் படம் தொடர்பான முதற்கட்ட போட்டோஷூட் நடைபெற்று முடிந்துள்ளதாகவும், வருகிற ஏப்ரல் 17–ஆம் தேதி நடிகர் விக்ரமின் பிறந்த நாளை ஒட்டி இந்தப் படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகலாம்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு மே மாத தொடக்கத்தில் தேர்தல் முடிந்த பிறகு தொடங்கும் என்றும் இந்தப் படம் இந்த ஆண்டு நவம்பர் அல்லது டிசம்பர் மாத வாக்கில் திரைக்கு கொண்டுவர படக்குழு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் படம் நடிகர் விக்ரம் ரசிகர்களை பூர்த்தி செய்யும் வகையில் முழுக்க முழுக்க கமர்ஷியல் அம்சங்களை கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இயக்குநர் ஆனந்த் சங்கர், நடிகர் விக்ரம் மற்றும் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் கூட்டணியில் உருவான இருமுகன் திரைப்படம் கடந்த 2016–ஆம் ஆண்டு வெளியானது. மீண்டும் இந்தக் கூட்டணி கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் கழித்து ஒன்றிணைந்து இருப்பது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி இருக்கிறது.

தமிழக சட்டசபை தேர்தலையொட்டி

# புதுச்சேரி எல்லையில் 3 நாட்களுக்கு மதுபான கடைகள் மூடல்!



சென்னை, ஏப். 13–

தமிழக சட்டசபை தேர்தலையொட்டி புதுச்சேரி எல்லையில் உள்ள மதுபான கடைகளை 3 நாட்களுக்கு மூட அம்மாநில கலால் துறை உத்தரவிட்டுள்ளது. 21–ம் தேதி காலை 10 மணி முதல் 23–ம் தேதி நள்ளிரவு 12 மணி வரை மதுபான கடைகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது. இதை மீறி கள்ளத்தனமாக மது விற்பனை செய்வது கண்டறிந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேர்தலையொட்டி அசம்பாவித சம்பவங்களை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## செய்தியாளர் / போட்டோ கிராபர் தேவை

மதுரை / சென்னை ஐயை மையமாக கொண்டு இயங்கிவரும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு விளம்பர பிரிவில் பணிபுரிய துடிப்பும் /ஆர்வமும் /அனுபவமும் நிறைந்த செய்தியாளர்கள் / புகைப்பட கலைஞர்கள் தேவை.

தொடர்பு – 7904806432

# தேவையில்லாத அழைப்புகளை கட்டுப்படுத்த வாட்ஸ் அப்பில் வசதி!

மெட்டா நிறுவனத்திற்கு சொந்தமான வாட்ஸ் அப் உலகின் முன்னணி சமூக வலைத்தளங்களில் ஒன்றாக உள்ளது. இந்தியாவில் மட்டும் 51 கோடிக்கும் மேற்பட்டவர்கள் இந்த வாட்ஸ் அப் செயலியை பயன்படுத்துகிறார்கள். உலகம் முழுவதும் பில்லியன் கணக்கானோர் பயன்படுத்தி வரும் இந்த வாட்ஸ் அப்பில், அவ்வப்போது புதிய அப்டேட்களையும் பாதுகாப்பு அம்சங்களையும் மெட்டா வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், வாட்ஸ் அப்பில் தேவையற்ற அழைப்புகளை கட்டுப்படுத்தவும் ஒரு ஆப்ஷன் உள்ளது. இது பலருக்கும் தெரிவது இல்லை.




அதாவது, வாட்ஸ்அப்பில் "அறியப்படாத அழைப்பாளர்களை நிறுத்து" என்ற சிறப்பம்சம் இருக்கிறது. இதை ஆன் செய்தால், தேவையில்லாத அழைப்புகளின் தொந்தரவில் இருந்து உடனே விடுபடலாம். வாட்ஸ்அப், பயனாளர்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு "Silence Unknown Callers" என்ற இந்த ஆப்ஷனை வைத்து இருப்பதாக வாட்ஸ் அப் கூறுகிறது.

இது எப்படி செயல்படும் என்றால், செட்டிங்ஸில் உள்ள இந்த ஆப்ஷனை ஆன் செய்தால், உங்கள் போனில் சேமித்து வைக்கப்பட்ட எண்கள் அல்லாமல் புதிய எண்களில் இருந்து அழைப்பு வந்தாலும் உங்கள் போன் ரிங்டோன் ஒலிக்காது. தெரியாத எண்களிலிருந்து வரும் அழைப்புகளை வாட்ஸ்அப் தானாகவே சத்தமில்லாமல் விடும். இதனால், நீங்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும் அல்லது ஓய்வெடுத்து கொண்டிருந்தாலும் தேவையில்லாத அழைப்புகள் உங்களை தொந்தரவு செய்யாது. பிறகு உங்கள் வாட்ஸ் அப் கால் ஹிஸ்ட்ரியை பார்த்தால் யாராவது போன் செய்து இருந்தால் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அழைப்பு வரும் பொழுது எந்த சத்தமும் கேட்காது. இது பயனர்களுக்கு தேவையற்ற தொந்தரவை தவிர்க்கும் என்று நெட்டிசன்கள் கூறியுள்ளனர்.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்

பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது


சென்னை

Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!






தமிழ்நாடு மாநில சட்டமன்ற பொதுதேர்தல் சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங் தமிழ்நாடு தலைமை–தேர்தல் அதிகாரி–அரசு செயலாளர் அர்ச்சனா பட்நாயக், மாநில காவல்துறைக்கான நோடல் அதிகாரி பிரவீன் குமார் அபிநபு ஆகியோர் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்–2026 தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மதுரை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட தேர்தல் அலுவலர்–மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாநகர காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



திண்டுக்கல் சட்டமன்ற திமுக உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் திண்டுக்கல் சிஎஸ்ஐ தூய பவுல் ஆலயத்தில் ஒட்டு சேகரித்து உதயசூரியன் சின்னத்தில் சபை மக்களிடம் வாக்கு சேகரிக்கிறார் திண்டுக்கல் சட்டமன்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் IP–.செந்தில்குமார் திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் உள்ள ஏ எம் சி சாலை ஆரோக்கிய மாதா தெரு போடிநாயக்கன்பட்டி தெய்வசிகாமணிபுரம் போன்ற பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு செய்தார் உடன் திண்டுக்கல் மாநகராட்சி மேயர் ராஜப்பா திண்டுக்கல் மதிமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன் திண்டுக்கல்இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட செயலாளர் மணிகண்டன் முன்னாள் நகர் மன்ற செயலாளர் நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பரப்புரை மேற்கொண்டனர்.

## தமிழகத்தில் பிரச்சாரத்தை புறக்கணிக்கும் ராகுல்?





சென்னை, ஏப். 13–

தமிழகத்தில் வரும் 23–ந் தேதி (வியாழக்கிழமை) சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 9 நாட்களே இருக்கும் நிலையில், அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் நரேந்திரமோடி இதுவரை 3 முறை தமிழகம் வந்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

அடுத்து 15–ந் தேதி நாகர்கோவிலில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், 18–ந் தேதி கோவையில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்று பேசுகிறார். இதில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

அதேபோல், ஆளுங்கட்சியான தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பொதுக்கூட்டத்தை நாளை மறுநாள் (15–ந் தேதி) சேலத்தில் பிரமாண்டமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதில், பங்கேற்க வருமாறு காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்திக்கு தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், ராகுல் காந்தி தரப்பில் இருந்து சாதகமான பதில் வரவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், தி.மு.க. தலைமை அதிருப்தியில் இருக்கிறதாம்.

சட்டசபை தேர்தலுக்கான கூட்டணி பேச்சு வார்த்தை நடந்தபோதே, தி.மு.க. – காங்கிரஸ் இடையே பிரச்சினை எழுந்தது. இதனால், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய காங்கிரஸ் தலைமை பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் கூறப்பட்டது. இதற்கு ராகுல்காந்தி ஆதரவு தெரிவித்த அதே நேரத்தில், அவரது தாயாரான சோனியாகாந்தி இதற்கு மறுப்பு தெரிவித்தாராம். அதன்பின்னரே, தி.மு.க.வுடனான கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது.

ராகுல்காந்தி தொடர்ந்து அதிருப்தியில் இருந்து வருவதால், தமிழகத்தில் தேர்தல் பிரசாரத்தை புறக்கணிக்க முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. ஏற்கனவே, புதுச்சேரி தேர்தல் பிரசாரத்திற்கு ராகுல்காந்தி, தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் ஒரே நாளில் பிரசாரத்திற்கு சென்றபோதும், ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளவில்லை. வெவ்வேறு நேரத்தில் பிரசாரம் செய்தனர். கேரள தேர்தல் பிரசாரத்திற்காக செல்ல, சென்னை மற்றும் கோவைக்கு ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி வந்தபோதும்கூட பிரசாரம் எதுவும் மேற்கொள்ளவில்லை. தற்போது, தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரீஷ் ஷோடங்கர், ராகுல்காந்தி பிரசாரத்திற்கு வருவார் என்று கூறிவந்தாலும், மற்றொரு மேலிட பொறுப்பாளரான முகுல் வாஸ்னிக் அதை உறுதிப்படுத்தவில்லை. அதனால், ராகுல்காந்திக்கு நெருங்கிய நண்பரான கமல்ஹாசன் மூலம் அழைப்பு விடுக்க தி.மு.க. தலைமை முயற்சி செய்து வருவதாக கூறப்படுகிறது.

## விஜய் அதிருப்தி: சென்னையில் 16–ந்தேதி முக்கிய ஆலோசனை!

சென்னை, ஏப். 13–

தமிழக சட்டமன்ற தேர்தல் 23–ந்தேதி நடைபெற உள்ள நிலையில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த தேர்தல் பரபரப்புக்கு மத்தியில் வருகிற 16–ந்தேதி தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் சென்னையில் முக்கிய ஆலோசனையில் ஈடுபடுகிறார். நுங்கம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் காலை 10 மணிக்கு நடைபெறும் இந்த கூட்டத்தில் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். 500–க்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் இந்த கூட் டத்தில் விஜய் நிர்வாகிகளுக்கு சட்டமன்ற தேர்தல் தொடர்பாக பல்வேறு அறிவுரைகளை வழங்குகிறார். இது தொடர்பாக காவல் துறையிடம் அனுமதி கேட்கப்பட்டு உள்ளது.



தேனி மாவட்டம்ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க.வேட்பாளர் மகாராஜன் எம்.எல்.ஏ. ஆண்டிபட்டி பேரூராட்சி பகுதியில் பேரூந்து நிலையம், பாப்பம்மாள்புரம் .திருவள்ளுவர் காலனி, கல் கோவில், மேலத்தெருமுனியாண்டி கோயில் பகுதி வாக்காளர்களிடம் வாக்குசேகரித்தார். உடன் ஆண்டிபட்டிகிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள் தி.மு.க.விற்கு வாக்கு சேகரித்தனர்.



திருமயும் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் வைரமுத்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். பொன்னமராவதி தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கொள்ளுப்பட்டி, பாரிநகர், காந்திநகர், கருப்புகுடிபட்டி, தேவன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட வேட்பாளருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகளை எடுத்து கூறி வாக்கு சேகரித்தார்...



புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாங்கோட்டை பகுதியில் பாஜக வேட்பாளர் ராமச்சந்திரன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும் புதுக்கோட்டை தொகுதியில் நீண்ட காலமாக உள்ள பிரச்சனைகளை தீர்க்க தாமரை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் எனவும் வேட்பாளர் ராமச்சந்திரன் கேட்டுக்கொண்டார்.



மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் திருமங்கலம் தொகுதி மு. மணிமாறன். அவர்களுக்கு வல்லரசு பாஸ்வர்ட் பிளாக் தல்வர், அம்மாவாசி தேவர் உதய சூரியன் சின்னத்திற்கு ஒட்டு கேட்டார்.



ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெல்லும் வேட்பாளர் அமைச்சர் சு முத்துசாமி சூரம்பட்டி பகுதியில் கடும் வெயிலிலும் நடந்தே சென்று திரளாக நின்று வரவேற்ற பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் சூரம்பட்டி பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி ஏ முருகேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் டி எஸ் குமாரசாமி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ரேவந்த், கௌதம், உள்ளிட்ட மாவட்ட மாநகர பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## டாக்டர் ராமதாஸ் உடல்நலம் குறித்து கேட்டறிந்த மு.க.ஸ்டாலின்!



சென்னை, ஏப். 13–

பா.ம.க. தலைமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:– சேலத்தில் பிரசாரம் மேற்கொண்டு இருந்தபோது பாமக நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த நிலையில் மேல் சிகிச்சைக்காக சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் ராமதாசின் உடல்நிலை குறித்து முதல்–அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு நலம் விசாரித்தார். மேலும், டாக்டர் ராமதாஸ் விரைந்து பூரண குணமாக வேண்டும் என்றும், குணமாகி வருவதை கண்டு மகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்தார். தனது உடல் நலனில் அக்கறை கொண்டு பேசிய முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு டாக்டர் ராமதாஸ் நன்றி தெரிவித்தார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருச்சி, புதுக்கோட்டையில் நடைபெற இருந்த விஜய் ரோடு ஷோ பிரசாரம் ரத்து!



திருச்சி, ஏப். 13–

திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பிரசாரம் செய்வதற்காக விஜய் சென்னையில் இருந்து நாளை தனி விமானம் மூலம் காலை 11 மணி அளவில் திருச்சிக்கு வருவார். திருச்சி விமான நிலையத்தில் இருந்து மொராய்ஸ் சிட்டி வரை சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு 'ரோடு ஷோ' நடத்தி தொண்டர்களையும், மக்களையும் சந்திப்பார். மொராய்ஸ் சிட்டி வளாகத்தில் நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்பார் என த.வெ.க. நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இந்த நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டு இருப்பதாகவும், நாளை விஜய் தர்மபுரி மாவட்டத்திற்கு செல்வதால் வேறு தேதியில் திருச்சியில் பிரசாரம் செய்ய அவர் வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை ஆகிய தொகுதிகளில் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து நாளை ஜய் பிரசாரம் மேற்கொள்வது ரத்து செய்யப்பட்டுள்ளது.



திண்டுக்கல் சட்டமன்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் IP.செந்தில்குமார் திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் உள்ள ஏ எம் சி சாலை ஆரோக்கிய மாதா தெரு போடிநாயக்கன்பட்டி தெய்வசிகாமணிபுரம் போன்ற பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு செய்தார் உடன் திண்டுக்கல் மாநகராட்சி மேயர் ராஜப்பா திண்டுக்கல் மதிமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன் திண்டுக்கல்இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட செயலாளர் மணிகண்டன் முன்னாள் நகர் மன்ற செயலாளர் நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பரப்புரை மேற்கொண்டனர்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020